



கழக துணை பொதுச்செயலாளர் நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி தனது பிறந்த நாளில் அரசு வழக்கறிஞர் ஆர்.பி.முருகன் ராஜா ஏற்பாட்டில் வடசென்னை எண்ணூர் பகுதியைச் சார்ந்த மாற்றுத்திறனாளி கார்த்திக்கு கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் மூன்று சக்கர ஸ்கூட்டரை வழங்கினார் ! உடன் வழக்கறிஞர் அணி சென்னை வடகிழக்கு மாவட்ட துணை தலைவர் திருமதி. ஷோபனா சுரேஷ் , வழக்கறிஞர் பி.சுரேஷ் , வழக்கறிஞர் மு.கா.கதிரவன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

## ஆளுநர் தனது உரையை வாசித்து ஜனநாயகக் கடமை ஆற்றி இருக்க வேண்டும்!

# மரபுப்படிதான் சட்டமன்றத்தை நடத்த முடியும்!

## பேரவைத் தலைவர் மு.அப்பாவு பேட்டி



**சென்னை, ஜன. 7 -**

**தமிழ்நாடு சட்டப்பேரவை அதன் மரபுப்படித்தான் நடத்த முடியும் என்று பேரவைத் தலைவர் மு.அப்பாவு பேட்டியளிக்கையில் குறிப்பிட்டார்.**

பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்கள் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி வருமாறு:-

சட்டமன்றம் நாளை (7 ஆம் தேதி) கூடியதும் சட்டமன்ற உறுப்பினர் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் மற்றும் முன்னாள் பிரதமர் மன்மோகன்சிங் ஆகியோர் மறைவுக்கு இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அவையின் அன்றைய நிகழ்ச்சிகள் அத்துடன் ஒத்தி வைக்கப்படும்.

அதைத் தொடர்ந்து 8 ஆம் தேதி முதல் 11 ஆம் தேதி வரை 4 நாட்கள் சட்டமன்றம் நடைபெறும். முதல் 3 நாட்கள் வினா - விடைகள் இடம் பெறும். 11 ஆம் தேதி ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கு பதிலளித்து முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் உரையாற்றுவார்.

அண்ணா பல்கலைக் கழக மாணவி விவகாரத்துக்கு அ.தி.மு.க. வினர் சட்டமன்றத்திற்குள் பதாகைகளுடன் வந்திருந்தனர்.

ஆளுநர் பேச எழுந்தபோதுதான் அ.தி.மு.க.வினர் பதாகைகளை காட்டி முழக்கமிட்டனர். பல்கலைக்கழக வேந்தர் என்ற முறையில் ஆளுநருக்கு எதிராக அ.தி.மு.க. வினர் பதாகைகளை காண்பித்தார்களா என்று தெரியவில்லை. அ.தி.மு.க.வினருக்கு இன்றைக்கு பேச வாய்ப்பில்லை என்பதால், அவர்கள் யாருக்கு எதிர்ப்பு தெரிவித்து பதாகைகள் காண்பித்து எதிர்ப்புத் தெரிவித்தார்கள் என்றும் தெரியவில்லை.

அவைக்குத் குந்தகம் விளைவித்து கலவரச் சூழலை உருவாக்கிய காரணத்தால், அ.தி.மு.க. வினரை வெளியேற்றிட வேண்டியதாயிற்று.

அரசமைப்பு விதி எண் 176 (1)ன்படி ஆளுநர் தனது உரையை வாசித்து ஜனநாயகக் கடமை ஆற்றி இருக்க வேண்டும். ஆனால் மரபின்படியும் அவர் உரையாற்றாமல் சென்று விட்டார்.

ஆந்திர மாநில சட்டப்பேரவையில், ஆளுநரை அழைக்காமல் கூட்டம் நடத்தியது உங்களுக்குத் தெரியும். ஆனால் தமிழ்நாட்டில் ஆண்டின் முதல் கூட்டத்தை ஆளுநரை அழைத்துதான் நடத்த வேண்டும் என்ற மரபு தொடர்ந்து கடைபிடிக்கப்படுகிறது. சட்டமன்ற மரபுகளை மாற்ற முடியாது. அது தொடரும்.

சென்னாரெட்டி ஆளுநராக இருந்த போது, சட்டப்பேரவையில் அவர் உரை நிகழ்த்திய போது அவரை மாற்ற வேண்டும் என்று அப்போது முதல்வராக இருந்த ஜெயலலிதா தீர்மானம் போட்டது நினைவிருக்கும்.

ஆளுநர் வரும்போதே சட்டப்பேரவையில் தேசிய கீதம் இசைக்க வேண்டும் என்றால் மரபை எப்படி மாற்ற முடியும்?

இவ்வாறு பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்கள் பேட்டியளித்தார்.

## இந்தியத் துணைக் கண்டத்தின் வரலாறு

# முதல்வரின் குரலை உரக்கச் சொல்லுவோம்!

*சென்னை, ஜன. 7-*

சிந்துவெளி எழுத்துக்கள் தொடர்பான புதிருக்கு விடை கண்டறியப்படும் போது, இந்தியத் துணைக் கண்டத்தின் வரலாற்றை, தமிழை தவிர்த்து விட்டு இனி எழுத முடியாது என்ற முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் குரலை உரக்கச் சொல்லுவோம் என்று 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

தினகரன் தலையங்கம் வருமாறு:-

### 'தினகரன்' நாளேடு தலையங்கம்!



தினகரன்

ஜனவரி 6, 2025 திங்கட்கிழமை

ஒரு மில்லியன் டாலர் பரிசு

சிந்து சமவெளி நாகரிகம் கண்டுபிடிக்கப்பட்டது இந்திய வரலாற்றையே மாற்றிப் போட்டது. 1924ம் ஆண்டு செப்டம்பர் 20ம் தேதி சிந்து சமவெளி நாகரிகத்தை கண்டுபிடித்து அறிவித்தார் ஜான் மார்ஷல். சுமேரிய நாகரிகத்தோடு இருந்த சில ஒற்றுமைகள் காரணமாக, இதன் காலகட்டம் சுமார் 4,500 ஆண்டுகள் பழமையானதாக இருக்கலாம் என்று முடிவானது. சிந்து சமவெளி (ஹரப்பா) நாகரிகத்தின் அழிவிற்கு சில நூற்றாண்டுகளுக்குப் பிறகே, ஆரியர் வருகை நிகழ்ந்தது என்கிறார் பிரபல வரலாற்று ஆய்வாளர் தேவ்தத் பட்நாயக்.

சிந்து சமவெளியில் வாழ்ந்த மக்கள் டிஎன்ஏ ஆதாரங்களின்படி, 4 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக கங்கை நதி சமவெளியிலிருந்து தென்பகுதி வரை பரவி வாழ்ந்தனர். இவர்களில் சிலர் தொல் திராவிட மொழியைப் பேசியிருக்கலாம். ராக்கிடி

சிந்து சமவெளி நாகரிகம் கண்டுபிடிக்கப்பட்டது இந்திய வரலாற்றையே மாற்றிப் போட்டது. 1924ம் ஆண்டு செப்டம்பர் 20ம் தேதி சிந்து சமவெளி நாகரிகத்தை கண்டுபிடித்து அறிவித்தார் ஜான் மார்ஷல். சுமேரிய நாகரிகத்தோடு இருந்த சில ஒற்றுமைகள் காரணமாக, இதன் காலகட்டம் சுமார் 4,500 ஆண்டுகள் பழமையானதாக இருக்கலாம் என்று முடிவானது. சிந்து சமவெளி (ஹரப்பா) நாகரிகத்தின் அழிவிற்கு சில நூற்றாண்டுகளுக்குப் பிறகே, ஆரியர் வருகை நிகழ்ந்தது என்கிறார் பிரபல வரலாற்று ஆய்வாளர் தேவ்தத் பட்நாயக்.

சிந்து சமவெளியில் வாழ்ந்த மக்கள் டிஎன்ஏ ஆதாரங்களின்படி, 4 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக கங்கை நதி சமவெளியிலிருந்து தென் பகுதி வரை பரவி வாழ்ந்தனர். இவர்களில் சிலர் தொல் திராவிட மொழியைப் பேசியிருக்கலாம். ராக்கிடி என்ற பகுதியில் சிந்துவெளி நாகரிகத்தைச் சேர்ந்த பெண்ணின் உடலில் இருந்து கிடைத்த டிஎன்ஏ, தமிழ்நாட்டின் இருளர் பழங்குடியைச் சேர்ந்தவர்களின் டி.என்.ஏ.வுடன் ஒத்துப் போகிறது. இதிலிருந்து தொல் திராவிடகுடியும் சிந்துவெளி மக்களும் இணைந்து வாழ்ந்ததை உணர முடிகிறது.

சிந்துவெளி நாகரிகம் ஆரியத்துக்கு முற்பட்டது, அங்கு பேசப்பட்டது திராவிட மொழியாக இருக்கலாம் என்று ஜான் மார்ஷல் நூறாண்டுகளுக்கு முன்பு சொன்ன குரல் இன்றைக்கு வலுப்பெற்றிருக்கிறது. சிந்துவெளி பற்றி ஜான் மார்ஷல் தன் கண்டுபிடிப்பை வெளியிட்டதும், பெரியார் தன் விடுதலை நாளிதழில் அதை பற்றி கட்டுரைகள் வெளியிட்டிருந்தார். அண்ணாவும் 1948ம் ஆண்டிலேயே சிந்துவெளி நாகரிகத்தின் அடையாளங்களை வெளிக்கொணர்ந்த சர் ஜான் மார்ஷல் சாதனைகளை பாராட்டி எழுதியிருக்கிறார்.

கடந்த 2010ம் ஆண்டு கோவை தமிழ் செம்மொழி மாநாட்டை வெற்றிகரமாக நடத்திய கலைஞர் செம்மொழி மாநாட்டு இலச்சினையில், குமரி வள்ளுவர் சிலை, பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்ற குறள் வரியுடன் சேர்த்து, சிந்துவெளி முத்திரையையும் பதிவிட்டார். சிவகளை ஆய்வு மூலம் 'தண்பொருநை' என்று அழைக்கப்பட்ட தாமிரபரணி ஆற்றங்கரை நாகரிகம், 3,200 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்று அறிவியல் வழிப்பட்ட ஆய்வுகள் அடிப்படையில் உறுதி செய்யப்பட்டுள்ளது.

சிந்துவெளி நாகரிக ஆய்வின் மிகவும் முக்கிய பகுதி, அங்கு கிடைத்த எழுத்துகள் தான். இவை எதனைக் குறிக்கின்றன என்ற விவாதம் நீண்ட நாட்களாக நடந்து வருகின்றன. சிந்து சமவெளியில் மொத்தம் 400 முதல் 600 தனித்துவமிக்க எழுத்து வடிவங்கள் இருந்தாலும், சுமார் 50 எழுத்துகளே திரும்பத் திரும்ப பயன்படுத்தப்படுகின்றன. பொதுவாக, ஒரு வரியில் ஐந்து முதல் 20 வார்த்தைகளே இருக்கின்றன. இந்த எழுத்துகளோ, சின்னங்களோ விருப்பப்படி பதிக்கப்படவில்லை. அவற்றில் ஒரு இலக்கண ஒழுங்கு இருந்தது.

செழித்து வளர்ந்த சிந்துவெளி பண்பாட்டின் எழுத்து முறையை இன்னும் நம்மால் தெளிவாக புரிந்து கொள்ள முடியவில்லை. நூறு ஆண்டுகளை கடந்தும் தீர்க்கப்படாத இந்த சிந்துவெளி புதிரை அறிய உலகெங்கும் உள்ள தொல்லியல் ஆய்வாளர்கள், மொழியியல் தமிழ் அறிஞர்கள் மற்றும் கணினி வல்லுநர்கள் உட்பட பலரும் இன்றளவும் பெரும் முயற்சி செய்து கொண்டு இருக்கிறார்கள்.

சிந்துவெளி எழுத்துக்களை தெளிவாக புரிந்து கொள்ளும் வழிவகையை கண்டறியும் நபர்கள் அல்லது அமைப்புக்கு ஒரு மில்லியன் அமெரிக்க டாலர் (ரூ.8.5 கோடி) பரிசாக வழங்கப்படும் என சென்னையில் நடந்த சிந்துவெளி பண்பாட்டு கண்டுபிடிப்பு நூற்றாண்டு நிறைவு பன்னாட்டு கருத்தரங்கில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார். இந்த புதிருக்கான விடை கண்டறியப்படும் போதுஇந்திய துணைக்கண்டத்தின் வரலாற்றை தமிழை தவிர்த்து விட்டு இனி எழுத முடியாது என்ற முதல்வரின் குரலை நாமும் உரக்க சொல்வோம்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# ஆளுநரைக் கண்டித்து நீலகிரி மாவட்டத்தில் கண்டன ஆர்ப்பாட்டம்!

## மாவட்டச் செயலாளர் பா.மு.முபாரக் அறிவிப்பு

*உதகை, ஜன. 7 -*

நீலகிரி மாவட்டச் செயலாளர் பா.மு.முபாரக் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தமிழகத்தில் கடந்த 2021ம் ஆண்டு முதல் எல்லோருக்கும் எல்லாம் என்கிற திராவிட மாடல் அரசு தமிழக மக்களின் ஏகோபத்ய ஆதரவுடன் கழக தலைவர் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் சிறப்புடன் செயல்பட்டு வருவதோடு இந்தியாவில் ஜனநாயகத்தை காக்கின்ற முதன்மை மாநிலமாக தமிழ்நாடு திகழ்ந்து வருகிறது.

அரசின் கொள்கை முடிவுகளை ஆளுநர் அவையில் வாசிக்காமலும், தமிழ்தாய் வாழ்த்தினை அவமதித்தும் சென்றுள்ளது மிகவும் கண்டனத்திற்குரியது என ஜனநாயகத்தின் மீது நம்பிக்கையுள்ள அனைத்து அரசியல் தலைவர்களும் தங்களது கண்டனத்தை தெரிவித்துள்ளனர்.

பா.ஜ.க ஆளாத மாநிலங்களில் ஆளுநர் மாளிகையை வைத்து மாநில அரசுகளில் தனி ராஜாங்கம் நடத்த மோடி அரசு தொடர்ந்து முயற்சித்து வருவதை வாடிக்கையாக கொண்டுள்ளது தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி தமிழையும் தமிழகத்தை வஞ்சித்து, மாநில உரிமைகளை சிதைத்து, மாநில சுயாட்சியை பறிக்கும் வகையில் செயல்பட்டு, மாநில ஒன்றிய அரசுகளுக்கு பாலமாக செயலாற்ற வேண்டிய ஆளுநர், பா.ஜ.க.,வின் ஏஜென்டாக தொடர்ந்து செயல்பட்டு வருகிறார். இவரை தமிழ்நாட்டை விட்டே துரத்துவதற்கு தமிழக மக்கள் தயாராகிவிட்டனர்.

தி.மு.க., தலைமை கழகம் வெளியிட்டுள்ள அறிக்கையில்



தமிழகத்தையும் - தமிழ்தாய் வாழ்த்தையும் தொடர்ந்து அவமதிக்கும் ஆளுநரை கண்டித்தும், ஒன்றிய அரசின் மீதுள்ள தமிழ்நாட்டு மக்களின் கோபத்தை திசைதிருப்பும் அதிமுக-பாஜக கள்ளக்கூட்டணியை கண்டித்தும் மாவட்ட தலைநகரங்களில் 7ம் தேதி கண்டன ஆர்பாட்டம் நடைபெறும் என அறிவித்துள்ளார்கள்.

அதன்படி, இன்று (7-1-2025 செவ்வாய்கிழமை) சரியாக காலை 11 மணியளவில் நீலகிரி மாவட்ட திமுக சார்பில் மாவட்ட தலைநகரான உதகை ஏ.டி.சி. ஜீப் நிறுத்தம் அருகில் மாபெரும் கண்டன ஆர்பாட்டம் நடைபெற உள்ளது.

எனவே, ஆர்பாட்டத்தில் மாவட்ட கழக நிர்வாகிகள், மாவட்டத்திலுள்ள தலைமை கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், நகரஒன்றியபேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கழக செயல்வீரர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட அனைவரும் கலந்துகொண்டு தலைமை கழகம் அறிவித்துள்ள இந்த ஆர்பாட்டம் வெற்றிபெற உதவிட வேண்டுகிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# ஏற்கெனவே இருக்கின்ற வைரஸ் காய்ச்சல்தான்! HMPV வைரஸ் பாதிப்பு குறித்து அச்சம் வேண்டாம்!

## தமிழ்நாடு பொதுசுகாதாரத்துறை தகவல்!

*சென்னை,ஜன.7-*

தமிழகத்தில் HMPV வைரஸ் பாதிப்பு குறித்து அச்சம் கொள்ள வேண்டாம் என்று தமிழக பொதுசுகாதாரத்துறை தெரிவித்துள்ளது. மேலும் சீனாவில் இருப்பது போல் உருமாற்றம் அடைந்த HMPV வைரஸ் எதுவும் தமிழகத்தில் இல்லை என்றும், தமிழகத்தில் பரவக்கூடிய HMPV வைரஸ் காய்ச்சல் வழக்கமாக பல ஆண்டுகளாக இருக்கும் வைரஸ் காய்ச்சல் தான் என்றும் பொது சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

**5 குழந்தைகளுக்கு வைரஸ் பாதிப்பு!**

சீனாவில் உருவாகியுள்ள புது வைரஸ் நோயால் மக்கள் அச்சமடைந்துள்ளனர். ஹியூமன் மெட்டாநிமோ வைரஸ் எனப்படும் HMPV வைரஸ், சீனா மட்டுமின்றி தற்போது இந்தியாவிலும் கால் வைத்துள்ளதாக கூறப்படுகிறது. நாட்டில் சென்னையில் 2 குழந்தை, பெங்களூரில் 2 குழந்தை, குஜராத்தில் ஒரு குழந்தை என 5 குழந்தை களுக்கு HMPV வைரஸ் பாதிப்பு கண்டறியப்பட்டுள்ளது.

சென்னையில் இரண்டு குழந்தைகளுக்கு வைரஸ் பரவல் கண்டறியப்பட்டது பலருக்கும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. ஆனால் இந்த வைரஸ் பரவல் குறித்து யாரும் பயப்பட வேண்டாம் என்றும், தமிழகத்தில் பரவக்கூடிய HMPV வைரஸ் காய்ச்சல் வழக்கமாக பல ஆண்டுகளாக இருக்கும் வைரஸ் காய்ச்சல் தான் என்றும் தமிழக பொதுசுகாதாரத் துறை தெரிவித்துள்ளது. இது தொடர்பாக தமிழக அரசின் பொதுசுகாதாரத்துறை கூறியிருப்பதாவது:

HMPV வைரஸ் பாதிப்பு என்பது பல ஆண்டுகளாக தமிழகத்தில் இருக்கக்கூடிய ஒரு வகை காய்ச்சல் தான். சளி, காய்ச்சல் என வழக்கமாக இருக்கக்கூடிய காய்ச்சல் தான் இது. யாரும் பயப்பட தேவையில்லை. சீனாவில் உருமாற்றம் அடைந்த HMPV வைரஸ் பாதிப்பு பரவி வருகிறது.

இந்த வகை வைரஸ் பாதிப்பு பரவும் போது தான் நோயாளிகளிடம் இருந்து விரைந்து பரவும் தன்மை கொண்டதாக இருக்கும். ஆனால் தமிழகத்தில் உருமாற்றம் அடைந்த HMPV வைரஸ் பாதிப்பு என்பது இதுவரை கண்டறியப்படவில்லை. ஏற்கனவே இருக்கின்ற HMPV வைரஸ் பாதிப்பாகத்தான் தற்போது தமிழகத்தில் பரவி வருகிறது. எனவே யாரும் பயப்பட தேவையில்லை. குறிப்பாக பொதுமக்கள் அச்சம் கொள்ள தேவையில்லை.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு வழிகாட்டுதலின்படி எழும்பூர் தெற்கு பகுதி கழக செயலாளர் வி. சுதாகர் ஆலோசனை படி எழும்பூர் தெற்கு பகுதி 108 அ வட்ட வார்டுக்குட்பட்ட 138 & 139 ஆகிய பாகங்களில் தெருக்களில் வீடு வீடாக நேரில் சென்று மக்களிடம் தேவைகள், குறைகளை மாமன்ற உறுப்பினர் – வட்ட கழக செயலாளர் எல். சுந்தர் ராஜன் கேட்டறிந்தார். உடன் கே.எஸ்.எம். நாதன், கழக செயற்குழு உறுப்பினர் நிர்மலா தேவி கழக பொதுக்குழு உறுப்பினர் து. களிமுத்து மு. குறளரசன் வட்ட கழக துணை செயலாளர் சரஸ்வதி. எஸ். அப்பேன். சி.டி. சுரேஷ் கழக நிர்வாகிகள் அணிகளின் அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர் பெருநகர சென்னை மாநகராட்சி சாலைத்துறை உதவிப்பொறியாளர், மின்துறை இளநிலைப் பொறியாளர், சுகதாரத்துறை சுகாதார ஆய்வாளர், திடக்கழிவு மேலாண்மைத்துறை துப்புரவு ஆய்வாளர், குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வாரிய உதவிப்பொறியாளர் மற்றும் வாக்குச் சாவடி நிலை முகவர்கள்(BLA2) கழக உடன்பிறப்புகள் ஆகியோர் இருந்தனர்.



திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க. வர்த்தக அணி சார்பில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் ஏ.ஜெ.பவுல் ஏற்பாட்டில் நகரச் செயலாளர் என்.இ.கே.மூர்த்தி முன்னிலையில் கீழ் அயனம்பாக்கத்தில் நடைபெற்றது. இதில் மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் இலவச மிதிவண்டி ஆயிரம் பெண்களுக்கு புடவை விளையாட்டு உபகரணங்கள் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரை ஆற்றினார். உடன் தலைமை கழக பேச்சாளர் திருவெற்றியூர் கருணாநிதி, யாசர் அராபத், மாநில மாவட்ட கழக நிர்வாகிகள் கே.ஜெ.ரமேஷ், பிரபு கஜேந்திரன், சி.ஜெரால்டு, எஸ்.ஜெயபாலன், காயத்திரி ஸ்ரீதர், ஆவடி மேயர் ஜி.உதயகுமார், எஸ்.சங்கர், ஏ.சி.தெய்வசிகாமணி, மா.வினாயகம், ஐ.ஜேக்கப், குமாரசாமி, நடராஜன், பானு அரசு, ஏ.இ.செல்வதுரை, சத்திய கிரி, சாது, ஏ.டி. பிரியாகுமார், விஜயசாரதி, மாவட்ட வர்த்தக அணி நிர்வாகிகள் கனகராஜ், எம். ராம்பாபு, தாமோதரன், எச்.சாபி, டி.மூர்த்தி, கே.மூர்த்தி, முரளி கிருஷ்ணன்,துரை கோபால் பரிசமுத்து, பொன் மனோகரன், விக்னேஸ்வரன், சாந்திராஜா, ருக்மணி பவுல், நாராயணன் , என்.ராஜி, ஏ.பி.ஜி.சக்கரவர்த்தி, பரந்தாமன், முருகன், செந்தில்குமார், வெங்கடேசன், தியாகராஜன், சுந்தரவேல், உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## ஆர்.கே.நகர் மேற்கு பகுதி

# மாவட்ட பிரதிநிதி பா.வேதாசலம் மறைவு !

### ஆர்.டி.சேகர் – கலாநிதி வீராசாமி – ஜே.ஜே.எபினேசர் – எஸ்.ஜெபதாஸ்பாண்டியன்– இரா.லட்சுமணன் அஞ்சலி !

*சென்னை, ஜன.7*

சென்னை வடக்கு மாவட்டம் ஆர்.கே.நகர் மேற்கு பகுதி,மாவட்ட பிரதிநிதியும் முன்னாள் 41(அ) வட்ட செயலாளருமான பா.வேதாசலம் வயது 75, ஞாயிற்றுக்கிழமை 5.1.2025 அன்று உடல் நலக் குறைவால் மறைவைதினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

அவரது உடலுக்கு சென்னை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி, ஜே.ஜே.எபினேசர் எம். எல்.ஏ,பகுதி செயலாளர்கள் எஸ்.ஜெபதாஸ் பாண்டியன், இரா.லட்சுமணன், வட்ட செயலாளர்கள் ஆர்.ஏ.எம்.சசிகுமார், நேதாஜி யு.கனேசன் எம்.சி, ஜி.ஏழுமலை, ஆர்.ராஜன், மாஸ் டி.வெங்கடேசன்,

மாவட்ட தொழிலாளர் அணி அமைப்பாளர் எஸ்.எம். பரசுராமன், மாவட்ட மருத்துவர் அணி அமைப்பாளர் டாக்டர் கலைவாணர், ஆகியோர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர்.

இதில் இ.ரவிக்குமார், ஏ. மோகன், எஸ்.பொன்ராஜ், ஏ.கே.பால்சாமி, ஜி.ராஜேந்திரன், வீ.மணிமாறன், ஆர். பழனி, எம்.நடராஜன், இ. பாலசுந்தரம், டி.ஜெஸ்டின், ஜி.வாசுதேவன், கே.மோகன், ஜி.வி.கோபால், ஆர்.தினேஷ்குமார், வி.செல்வராஜ், எஸ். சதிஷ்குமார், ஆர்.வி.மாசானதுரை, எம்.பி.கிளை மன்ட்ராஜ், வி.கார்த்திக், கே. பழனி,ஏ.தனசேகர், எம்.கே. ரங்கநாதன், கே.ரவிச்சந்திரன், எஸ்.சூரியபிரபா, ஆர்.சூரியகாந்தா, ஜி.ரவி, கே.அன்புமணி, ஜெ.செல்லப்பன், ஏ. விஸ்வநாதன், எஸ்.நீலமேகன், பி.பாலமுருகன், டி.அறிவழகன், ஒ.இ. அழகரசன், ஜி. சண்முகராஜ், எம்.சேகர், எம். பி.கன்னியப்பன், வி.பூபதி,டி. கிரி, அபிஷேக், அ.பழனி, சி.நமச்சிவாயம், கே.டில்லிதுரை, பெ.ரமேஷ், பி.அரசு, ஆர்.விஜயரங்கன், சூரி,பொன்சேகர், ஆர்.தினேஸ்குமார், பி.முருகன், டி.ஜெயபால், ஏ. மூர்த்தி, எஸ்.ஷீதர், சி.முனியம்மாள், கழக நிர்வாகிகள், கழக தோழர்கள் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினார்கள்.



தாம்பரம் மாநகரம் 33வது வட்ட கழக செயலாளர் எம்.வினோத் மூத்த சகோதரர் எம்.ராஜசேகர் இயற்கை எய்தினார். அன்னாரின் இறுதி ஊர்வலம் திங்கட்கிழமை மாலை 4 மணியளவில் அவரது இல்லத்தில் இருந்து புறப்பட்டு மௌலானா நகர் ஈடுகாட்டில் நல்லடக்கம் செய்யப்பட்டது. தகவலறிந்து தாம்பரம் மாநகர கழக செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ., மேயர் க.வசந்தகுமாரி, மண்டல குழுத்தலைவர்கள் டி. காமராஜ், எஸ்.இந்திரன் மற்றும் செ.சுரேஷ், டி.ஆர்.கோபி, லிங்கேஸ்வரி பாபு, எல்.பெரியநாயகம், இரா. செல்வகுமார், எஸ்.ஜி.கருணாகரன், கி.வேல்மணி, ஜா.ரவிக்குமார், மா.கன்னியப்பன், எல்.பெரியநகம், தங்கராஜ், சித்திரம் வாசுதேவன், முனுசாமி, துரைபாபு, மாகலிங்கம், தாஸ், ரமேஷ்பாபு, மேகநாதன், ரகுபதி, து.மாரி, பார்த்திபன், ராஜகுருசாமி, ஹரிஷ், மதன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், பொதுமக்கள் மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார்கள்.



கடலூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதியில் கோ.அய்யப்பன் எம்.எல்.ஏ. தமிழ் புத்தாண்டு மற்றும் பொங்கல் திருநாளை முன்னிட்டும் மற்றும் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரிசி, மளிகை பொருட்கள், போர்வை உள்ளிட்ட நிவாரண உதவிகள் வழங்கினார். பின்னர் சாலை சீரமைப்பு பணிகளை விரைந்து முடிக்க அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார். அப்போது முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் தமிழரசி பிரகாஷ், துணைத் தலைவர் கலியமூர்த்தி, நிலவுல வங்கி தலைவர் கே.வி.எஸ்.ராமலிங்கம், கூட்டுறவு சங்கத் தலைவர் ஆதி பெருமாள், அரசு ஒப்பந்ததாரர் ராஜசேகர், வேலன், ஸ்டில்ஸ் வேல்முருகன், முன்னாள் ஊராட்சித் மன்ற தலைவர் சுதாகர், தொ. மு.ச. ஆறுமுகம், பார்த்திபன், விநாயகம், சுதாகர், முருகவேல், நந்தன், ரமேஷ் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.